

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 40 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 03 – வெள்ளிக்கிழமை 19 செப்டம்பர் 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 40 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 03 - Friday 19 September 2025 - Madurai 12 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.9.2025) கரூர் மாவட்டம், கோடங்கிப்பட்டியில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், பெரியார் விருதினை கழக துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், அண்ணா விருதினை சுப. சீத்தாராமன் அவர்களுக்கும், கலைஞர் விருதினை சோ.மா.இராமச்சந்திரன் அவர்களுக்கும், பாவேந்தர் விருதினை நினைவில் வாழும் குளித்தலை சிவராமன் அவர்களின் சார்பாக அவரது துணைவியாரிடமும், பேராசிரியர் விருதினை மருதூர் இராமலிங்கம் அவர்களுக்கும், மு.க. ஸ்டாலின் விருதினை பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களுக்கும், முரசொலி அறக்கட்டளையின் சார்பில் முதன் முறையாக முரசொலி செல்வம் விருதினை மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர்கள் – ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், கரூர் மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் பெருமக்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக நிருவாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் நிருவாகிகள், வாரியத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## போராடித் தலைநிமிர்த்திய தமிழ்நாட்டை ஒரு நாளும் தலைகுனிய விடமாட்டோம்!
## தி.மு.கழகம்தான் தமிழ்நாட்டை எந்நாளும் காக்கின்ற அரணாகும்!

# 2026 தேர்தலிலும் வெற்றி பெற்று புது வரலாறு படைப்போம்!

### கரூரில் - இலட்சக் கணக்கானோர் பங்கேற்ற முப்பெரும் விழாவில் விருதுகளை வழங்கி
## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**கரூர், செப்.19-**

**கரூரில் - இலட்சக்கணக்கானோர் பங்கேற்ற கழக முப்பெரும் விழாவில் விருதுகளை வழங்கி எழுச்சியுரையாற்றிய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “போராடித் தலைநிமிர்த்திய தமிழ்நாட்டை ஒரு நாளும் தலைகுனிய விடமாட்டோம்; தி.மு.கழகம்தான் தமிழ்நாட்டை எந்நாளும் காக்கின்ற அரணாகும்” என்றும், 2026 தேர்தலிலும் தொடர்ந்து வெற்றி பெற்று புது வரலாறு படைப்போம் என்றும் சூளுரைத்தார்.**

**கரூரில், நேற்று முன்தினம் (17-09-2025) நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய எழுச்சியுரை வருமாறு:-**

இது முப்பெரும் விழாவா, விரைவில் நாம் சந்திக்க இருக்கும் வெற்றி விழாவா…!

இது கரூர் அல்ல; திராவிட முன்னேற்றக் கழக ஊர்!

கொட்டும் மழையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், இதே நாளில் வட சென்னைப் பகுதியில் அமைந்திருக்கும் ராபின்சன் பூங்காவில் கழகத்தைத் தொடங்கி வைத்தார்கள். அவ்வாறு தொடங்கி வைத்த இந்தக் கழகம், 75-ஆம் ஆண்டுகாலம் மட்டுமல்ல, நூற்றாண்டும் நாம் காணப் போகிறோம்.

உங்களிடம் பேசுவதைவிட, இந்தக் கொட்டும் மழையிலும் உங்களின் எழுச்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று எனக்கு உணர்வு ஏற்பட்டிருக்கிறது! என்ன உணர்ச்சி! என்ன ஆர்வம்!

### ஓயாமல் உழைக்கும் உதயசூரியன்கள்!

என் உயிரோடு கலந்திருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகளே உங்களுக்கு என் முதல் வணக்கம்!



14 வயதில் கருப்பு - சிவப்பு கொடி பிடித்து, கழகம் - கழகம் என்று உழைக்கத் தொடங்கிய என்னை, இந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்புக்கு கொண்டு வந்தவர்கள் நீங்கள்! ஓயாமல் உழைக்கும் உதயசூரியன்களான உங்களை ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் எனக்கு புது எனர்ஜி வந்துவிடும்! காடு - மேடு, இரவு - பகல், மழை - வெள்ளம், அடக்குமுறைகள், போராட்டங்கள், சிறைச்சாலைகள் என்று, நீங்கள் அனைவரும் போராடித்தான், என்னைத் தலைவர் ஆக்கி இருக்கிறீர்கள்!

மக்களின் ஆதரவுடன், இன்றைக்கு நாடே திரும்பிப் பார்க்கும் நம்முடைய திராவிட மாடல் அரசையும் நீங்கள்தான் உருவாக்கி, என்னை முதலமைச்சர் பொறுப்பில் உட்கார வைத்தீர்கள்! உங்களைச் சந்திப்பதைவிட எனக்கு வேறு என்ன மகிழ்ச்சி!

முப்பெரும் விழா என்றால், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள் - பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்தநாள் - அறிவியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமான நாள் - ஆகிய மூன்றையும் சேர்த்து, இந்த திராவிட மாதத்தில் முப்பெரும் விழாவைக் கொண்டாடுகிறோம். இந்த விழாவில், நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, அதிலுள்ள மேடு - பள்ளங்களைத் திருத்திக் கொள்ளவும், நாம் அடுத்து செல்லவுள்ள பாதையை - வெற்றிப் பாதையாகச் செப்பனிடவும் ஓரிடத்தில் ஒன்றுகூடியிருக்கிறோம்!

கூடிக் கலையும் விழாவாக இல்லாமல், அறிவார்ந்த உரையாடல்களை நிகழ்த்தி, கருத்தாழமிக்க எண்ணங்களை பகிர்ந்து, கொள்கைகளைக் கூர் தீட்டும் நிகழ்ச்சியாக இது நடந்து கொண்டிருக்கிறது!

அதனால்தான், திராவிடக் கொள்கைகளை தூக்கிப் பிடித்து உழைத்தவர்களுக்கு மரியாதை செய்து, விருதுகள் வழங்குகிறோம்!

இந்த ஆண்டு, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பெயரிலான விருதைக் கழகத் துணைப் பொதுச்செயலாளரும் - நாடாளுமன்ற குழுத் தலைவருமான என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி பெற்றிருக்கிறார். அவர், **பார்த்தால் கனிமொழி; நாடாளுமன்றத்தில் பேசினால் கர்ஜனை மொழி! திராவிட இயக்கத்தின் திருமகளாக - பெரியாரின் பேத்தியாக - பார்லிமெண்ட்-இல் ஒலிக்கிறார்!**

அடுத்து, பேரறிஞர் அண்ணா பெயரிலான விருதை நம்முடைய அண்ணன் சுப. சீதாராமன் அவர்கள் பெற்றிருக்கிறார். அரசு ஊழியராக இருந்த இவரை, “ராஜினாமா செய்துவிட்டு கழகப் பணியாற்ற வா” என்று நம்முடைய தலைவர் கலைஞர் அழைத்தார்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாக இருக்கும் செந்தில் பாலாஜி எழுச்சியுடன் இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளார்!



**இந்த ஆண்டு முப்பெரும் விழாவைக் கரூரில் நடத்த வேண்டும் என்று அனுமதி கேட்டு, அருமைச் சகோதரர் செந்தில் பாலாஜி அவர்கள், என்னிடம் வந்தார். நானும் ஒப்புதல் அளித்தேன்... பொதுக்கூட்டம் என்று சொல்லி, மாபெரும் எழுச்சி மாநாட்டையே இங்கே ஏற்பாடு செய்திருக்கிறார், செயல்வீரர் செந்தில்பாலாஜி அவர்கள். நாம் கோடு போடச் சொன்னால் ரோடு போடுவார்... நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். ரோடு போட்டு, அந்த ரோட்டு மேல்தான் நான் வாகனத்தில் வந்தேன்!**

**மேற்கு மண்டலத்தில் நம்முடைய எதிரிகளுக்கு எல்லாம் சிம்மசொப்பனமாக இருப்பவர்தான், நம்முடைய செந்தில் பாலாஜி அவர்கள்! அதனால்தான், அவர் வெளியில் இருந்தால் தங்களால் நிம்மதியாக தூங்க முடியவில்லை என்று, அவரை முடக்கப் பார்த்தார்கள்! ஆனால், அவரை முடக்க முடியுமா? எடுத்த பணியை வெற்றிகரமாக முடித்து காட்டுவார்!**

**நான் உறுதியாகச் சொல்கிறேன்... கழக வரலாற்றிலேயே, இப்படியொரு பிரமாண்டமான முப்பெரும் விழா நடந்திருக்காது! கொட்டுகின்ற மழையாக இருந்தாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் குடையை பிடித்துக் கொண்டு நாற்காலிகளைத் தலையில் வைத்துக் கொண்டு இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்களே... இது ஒன்றே சாட்சி! இந்த நிகழ்ச்சி சிறப்பாக இருக்க வேண்டும் என்று உழைத்த அருமைச் சகோதரர் செந்தில் பாலாஜி அவர்களுக்கும் – அவருக்குத் துணை நிற்கும் கரூர் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! தலைமைக் கழகத்தின் சார்பில் இருகரம் கூப்பி என்னுடைய நன்றியையும் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்!**